DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 79/2022 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | பன்னீர் செல்வம் |
| Father's Name | : | சாத்தையா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.08.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பில் 2வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த விபத்து எந்த தேதி, மாதம், வருடம் நடந்தது என்றால் 18.03.2020ல் நடந்தது. விபத்தில் காயம் ஏற்பட்டவர் பெயர் முத்துராமலிங்கம், அவர் அப்பா பெயர் தெரியாது. அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் களக்குடி கிராமம் ஆகும். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி விபத்தில் காயம்பட்ட முத்துராமலிங்கம் இறந்துவிட்டாரா என்றால் இறந்துவிட்டார். மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**(1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 79/2022 |
| Deposition of Witness for | : | P.W. 3. |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | காளிமுத்து |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.08.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலம்மாள் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ பதிவேட்டுத்துறை அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முத்துராமலிங்கம் என்பவர் கடந்த 19.03.2020 ல் எங்கள் மருத்துவமனையில் விபத்துக் காரணமாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு கடந்த 10.04.2020 ம் தேதியன்று சிகிச்சையில் இருந்து (Against Medical Advice) விடுவிக்கப்பட்டார். எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு செலவு செய்யப்பட்ட அவரது மருத்து பில்களின் மொத்த தொகை ரூ.2,61,939/– ஆகும். அதற்கான பில்களை கணினி பதிவிறக்க நகல் சான்றிடப்பட்டதை நான் எடுத்து வந்துள்ளேன். மேலும் மருத்துவ கோப்பு சான்றிட்ட நகல் எடுத்துவந்துள்ளேன். **மேற்கண்ட ஆவணங்கள் சா.சா.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

மருத்துவ கோப்புகளில் உள்ள விவரம் என்ன என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையில் இருந்து முத்துராமலிங்கம் விடுவிக்கப்பட்டபோது உயிரோடு தான் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு என்ன மருத்து சிகிச்சை கொடுத்தார்கள் என்று அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பில்கள் அனைத்தும் சான்றிட்ட நகல் என்றும் அதன் அசல் பில்கள் விடுவிக்கப்பட்ட போது மனுதாரர் தரப்பு வசம் கொடுக்கப்படும் என்று சொன்னால் சரிதான்.

**(1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.